லொயோலா

# ஈசி சமூக அறிவியல்

# 9

## இலவசம்
## வரைபடப்பயிற்சி புத்தகம்

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

லொயோலா பப்ளிகேஷன்ஸ்

விவேக் இல்லம் 19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 007.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.280/-

★★ Less Strain Score More

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

ஆசிரியர்கள் :

திரு. D. கோயில்மணி M.A., M.Ed.,
முன்னாள் உதவித்தலைமை ஆசிரியர்
தூய யோவான் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை.

திரு. A. போர்ஜியா
முன்னாள் உதவித்தலைமை ஆசிரியர்
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை.

லொயோலா பப்ளிகேஷன்ஸ்

# நூலினுள் புகுமுன்

அன்பு நிறை தம்பியரே ! தங்கையரே !

வாழ்த்துக்கள்,

- 9-ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடம் கடினமானது. இதை எளிமையாக்கும் பொருட்டு அரசு பொதுத்தேர்வில் விடைத்தாள்கள் திருத்தப்படும் (key) முறை, பாடத்தை எளிமையாக படிக்கும் முறை, வினாக்களுக்கு மிகச் சரியான விடை அளிக்கும் முறையில், விடைகள் அனைத்தும் மிக எளிமையாக மாணவ, மாணவிகள் எளிதில் புரியும் வண்ணம் Point by point அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ஒரு மதிப்பெண் வினாக்கள் கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் 2 மற்றும் 5 மதிப்பெண் வினா-விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- கூடுதலான வரைபடங்களுடன் வரைபட பயிற்சி புத்தகம் இலவசமாக கொடுத்துள்ளோம்.
- **லொயோலா ஈ.சி** புத்தகங்களை நன்கு புரிந்து முழுமையாக படித்தால், 10, 11 மற்றும் 12ம் வகுப்பு அரசுத்தேர்வை எவ்வித அச்சமின்றி எதிர்க்கொண்டு உயர் மதிப்பெண் பெறலாம்.

நன்றியுடன்...

**லொயோலா பப்ளிகேஷன்**

www.Padasalai.Net

# பொருளடக்கம்


| அலகு எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம் | 5 |
| 2 | பண்டைய நாகரிகங்கள் | 12 |
| 3. | தொடக்ககாலத் தமிழ் சமூகமும் பண்பாடும் | 20 |
| 4. | அறிவு மலர்ச்சியும், சமூக – அரசியல் மாற்றங்களும் | 29 |
| 5. | செவ்வியல் உலகம் | 37 |
| 6. | இடைக்காலம் | 43 |
| 7. | இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் | 50 |
| 8. | நவீன யுகத்தின் தொடக்கம் | 57 |
| 9. | புரட்சிகளின் காலம் | 65 |
| 10. | தொழிற்புரட்சி | 73 |
| 11. | ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம் | 80 |
| | **புவியியல்** | |
| 1. | நிலக்கோளம்–I புவி அகச்செயல்பாடுகள் | 87 |
| 2. | நிலக்கோளம்–II புவி புறச்செயல்பாடுகள் | 97 |
| 3. | வளிமண்டலம் | 107 |
| 4. | நீர்க்கோளம் | 118 |
| 5. | உயிர்க்கோளம் | 126 |
| 6. | மனிதனும் சுற்றுச் சூழலும் | 135 |
| 7. | நிலவரைபடத் திறன்கள் | 143 |
| 8. | பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல் | 151 |
| | **குடிமையியல்** | |
| 1. | அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி | 155 |
| 2. | தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் | 162 |
| 3. | மனித உரிமைகள் | 169 |
| 4. | அரசாங்கங்களின் வகைகள் | 178 |
| 5. | உள்ளாட்சி அமைப்புகள் | 183 |
| 6. | சாலை பாதுகாப்பு | 188 |
| | **பொருளியல்** | |
| 1. | மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை | 191 |
| 2. | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு | 198 |
| 3. | பணம் மற்றும் கடன் | 205 |
| 4. | தமிழகத்தில் வேளாண்மை | 211 |
| 5. | இடம்பெயர்தல் | 217 |


★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வரலாறு

அலகு 1

# வரலாறு

# மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும் வரலாற்றுக்கு முந்தைய காலம்

## பகுதி – I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு
**விடை ஆ) சிம்பன்ஸி**

2. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்
அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்
**விடை இ) புதிய கற்காலம்**

3. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர்_________ ஆவர்.
அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
**விடை இ) ஹோமோ சேபியன்ஸ்**

4. எகிப்து, இஸ்ரேல்-பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி ____________ எனப்படுகிறது
அ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு ஆ) பிறைநிலப் பகுதி
இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு
**விடை ஆ) பிறைநிலப்பகுதி**

5. சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் __________ கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்.
அ) நுண்கற்காலம் ஆ) பழங்கற்காலம் இ) இடைக் கற்காலம் ஈ) புதிய கற்காலம்
**விடை ஆ) பழங்கற்காலம்**

6. i) எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.
ii) வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.
iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன,
iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.
அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி இ) i) மற்றும் iv) சரி ஈ) ii) மற்றும் iii) சரி
**விடை இ) i) மற்றும் iv) சரி**

7. i) செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்
ii) புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.
iii) புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.
iv) விலங்குகளை வளர்த்தல் , பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.
அ) i) சரி ஆ) ii) சரி இ ) ii) மற்றும் iii) சரி ஈ) iv) சரி **விடை அ ) i) சரி**

8. **கூற்று :** தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
**காரணம் :** நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.
அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு,
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **விடை ஈ) கூற்றும் காரணமும் தவறானவை**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கைகோடரிகளும் வெட்டுக்கருவிகளும் ________ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும். **விடை: கீழ் பழங்கற்கால**
2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் __________ தொழில் நுட்பம் என அழைக்கப்படுகின்றன. **விடை: கற்கருவி**
3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் __________ எனப்படும். **விடை: இடைக்காலம்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க

1. அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது தப்பிப்பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.
ஆ) 'உயிர்களின் தோற்றம் குறித்து' என்ற நூலை ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.
இ) உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த டார்வின் கோட்பாடு இயற்கைத்தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.
ஈ) கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும்
**விடை அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது தப்பிப்பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.**

2. அ) குரங்கினங்களில் உராங் உட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.
ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.
இ) செதிலை கருவிகள் செய்ய பயன்படுத்த முடியாது.
ஈ) சிறு செதில்கள் தயாரிக்கப் பயன்படும் மூலக்கல் அச்சூலியன் எனப்படும்.
**விடை: ஆ ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.**

## IV. பொருத்துக.

| | I | | II | விடைகள் |
|---|---|---|---|---|
| 1 | பழங்கால மானுடவியல் | அ | தேரி | உ |
| 2 | கோடரிக்கருவிகள் | ஆ | வீனஸ் | இ |
| 3 | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | இ | அச்சூலியன் | ஆ |
| 4 | செம்மணல் மேடுகள் | ஈ | நுண்கற்காலம் | அ |
| 5 | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | உ | மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு | ஈ |

## V. சுருக்கமான விடை தருக

1. **ஊகக் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் , அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?**

➢ பரிணாம வளர்ச்சிப் போக்கில் மனிதர்கள் இயற்கை, தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் உலகம் குறித்துச் சிந்திக்கவும், கேள்வி எழுப்பவும் தொடங்கினர்.

➢ இதன் மூலம் மனிதர்கள் உணர்தல் நிலையையும் அறிவாற்றலையும் கொண்டவர்களாக மாறினார்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.**

- ➢ இரும்புக்கால மக்கள் வேளாண்மை மேற்கொண்டு, ஆடு, மாடுகளையும் வளர்த்தார்கள்.
- ➢ சில குழுக்கள் வேட்டையாடிக்கொண்டும், உணவு சேகரித்துக் கொண்டும் இருந்தநிலையில், இவர்கள் பாசன நிர்வாகத்தை மேம்படுத்தினர். திணையும், நெல்லும் பயிரிட்டனர்.
- ➢ பானைகள் செய்தார்கள். நிரந்தரமான இடங்களில் வசித்தார்கள். கலைகள் பல வளர்ந்தனர்.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு**

- ➢ டோல்மென் எனப்படும் கற்திட்டை.
- ➢ சிஸ்ட் எனப்படும் கல்லறைகள்
- ➢ மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக்கல், தாழி, பாறைக் குடைவு குகைகள்.
- ➢ சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள்.

**4. கருவி செய்வதில் கீழ்ப் பழைய கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.**

- ➢ கீழ்ப் பழைய கற்கால மக்கள் தமது வாழ்க்கைத் தேவைகளுக்காக இருமுகக் கருவிகளான கைக்கோடாரி, வெட்டுக்கத்தி போன்ற பல கருவிகளைச் செய்தார்கள்.
- ➢ இவை சமபங்கு உருவ அமைப்பை (Symmetry) பெற்றுள்ளன. மனித மூதாதையரின் அறிவுணர் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.
- ➢ பெரிய கற்களை செதில்களாகக் சீவி பல கருவிகளை வடிவமைத்தார்கள்.

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் - உறுதிப்படுத்தவும்.**

**விவசாயம்:**

- ➢ பெருங்கற்கால (இரும்புகால) மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டபொழுது திணையும் நெல்லும் பயிரிடப்பட்டன.
- ➢ நதிகள், குளங்களுக்கு அருகே பெருங்கற்கால இடங்கள் அமைந்ததால் பாசன நிர்வாகம் மேம்பட்டது. பாசன தொழில் நுட்பம் வளர்ந்தது.
- ➢ ஈமச் சின்னங்களுக்குள நெல்லை வைத்துப் புதைத்தார்கள்.

**சான்றுகள்:** ஆதிச்சநல்லூர், பொருந்தல்.

**பானை செய்தல்:**

- ➢ கறுப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. உள்ளே கறுப்பாகவும், வெளியே சிவப்பாகவும், பளபளப்பாகவும் இம் மண்பாண்டங்கள் காணப்பட்டன.
- ➢ இப்பாண்டங்கள் சமையல், பொருள்கள் சேமிப்பு மற்றும் சாப்பிடுவதற்கு பயன்பட்டன.

**உலோகக்கருவிகள்**

- ➢ பெருங்கற்கால இரும்புக் கருவிகள் வேளாண்மை, வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் மற்றும் போர்களில் பயன்படுத்தப்பட்டன. வாள், குறுவாள், கோடவரி, உளி, விளக்கு, மக்காலி ஆகியவை கிடைத்துள்ளன.
- ➢ வெண்கலக் கிண்ணங்கள், கலங்கள், முகம் பார்க்கும் கண்ணாடி, மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.
- ➢ இக்கால கல்லறைகளில் ஈமப்பொருட்களாக இரும்புப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக**

புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் கால கட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக மனித மூதாதையரின் எலும்பு புதை படிவங்கள் புதைந்துள்ளன.

- ➢ மண் மற்றும் பாறை அடுக்குகள், தொல்மானுடவியல் அறிஞர்கள் மற்றும் தொல்லியல் அறிஞர்களால் அகழ்ந்து, சான்றுகள் சேகரிக்கப்படுகின்றன.
- ➢ அறிவியல் பூர்வமாக கணிக்கப்படும் புதை படிவங்கள் மற்றும் மண்ணடுக்குகளின் காலம் மனிதர்களின் பரிணாமம், தொல் பழங்காலம் பற்றி அறிய உதவுகிறது.
- ➢ நிலவியல் ஆய்வாளர்களால் புவியின் நீண்ட நெடிய வரலாறு நெடுங்காலம் (Era), காலம் (Period), ஊழி (Epoch), என பிரிக்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- முந்தைய தொல்லுயிரூழி– பல செல் உயிரினங்கள்
  பழந்தொல்லுயிரூழி – மீன்கள், ஊர்வன, தாவரங்கள்
  இடைத் தொல்லுயிரூழி – டைனோஸர்
  பாலூட்டிகள் காலம் – ஆஸ்ட்ரோலாபித்திஸைன்கள் (குரங்கினம்)
  (இக் குரங்கினத்திலிருந்துதான் நவீன மனித இனம் தோன்றியது)

## VII. மாணவர் செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. உலக வரைபடத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால நாகரிகம் நிலவிய பகுதிகளைக் குறிக்கவும்
2. வரலாற்றுக்கு முந்தைய காலம் தமிழ்நாட்டில் நிலவிய இடங்கள் என்ற தலைப்பில் ஒரு கண்காட்சியை அமைக்கவும்

# பகுதி – II கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராய்வது பற்றிகுறிப்பிடப்படும் இயல் எது?
   அ) தொல்மானுடவியல் ஆ) வரலாறு இ) புவியியல் ஈ) தொல்லியல்
   **விடை: ஈ) தொல்லியல்**

2. மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆராய்ந்து அறிந்து கொள்ளும் இயல்.
   அ) மண்ணடுக்கியல் ஆ) தொல்மானுடவியல்
   இ) தொல்லியல் ஈ) புவியியல்
   **விடை: ஆ) தொல்மானுடவியல்**

3. ஆஸ்ட்ரோலாபித்திஸைன்கள் தோன்றிய காலம் எது?
   அ) தொல்லுயிரூழி காலம் ஆ) இடைத் தொல்லுயிரூழி காலம்
   இ) பாலூட்டிகள் காலம் ஈ) பழந்தொல்லுயிரூழி காலம்
   **விடை: இ) பாலூட்டிகள் காலம்**

4. மறுமலர்ச்சி எங்கு தோன்றியது?
   அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா
   **விடை: ஈ) ஐரோப்பா**

5. இயற்கை மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளால் உருவான பாறை மற்றும் மண் அடுக்குகளின் தோற்றம், தன்மை குறித்து ஆராய்தல்
   அ) தொல்லியல் ஆ) மண்ணியல் இ) புவியியல் ஈ) மண்ணடுக்கியல்
   **விடை: ஈ) மண்ணடுக்கியல்**

6. உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம்
   அ) ஆஷ்மோலியன் ஆ) என்னிகால்டி-நன்னா
   இ) கேபி டோலைன் ஈ) கேம்பிரிட்ஜ்
   **விடை: அ) ஆஷ்மோலியன்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. புவி எத்தனை ஆண்டுகளுக்கு முன் உருவானது ________ **விடை: 454 பில்லியன்**
2. ஆஸ்ட்ரோலாபித்திஸைன் என்பதன் பொருள் ________ **விடை: தெற்கத்திய மனிதக் குரங்கு**
3. வரலாறு எழுதுவது யாருடைய காலத்தில் தொடங்கியது ________ **விடை: கிரேக்கர்கள்**
4. மறுமலர்ச்சியின் காலம் எந்த நூற்றாண்டு ________ **விடை: 15-16**
5. உலகின் மிகத் தொன்மையான அருங்காட்சியகம் ______ அது எங்குள்ளது ________
   **விடை: என்னிகால்டி-நன்னா**
6. சார்லஸ் டார்வின் ______ , ______ என்ற நூற்களை எழுதினார்.
   **விடை: உயிரினங்களின் தோற்றம், மனிதனின் தோற்றம்**
7. மனிதர்களின் மூதாதையர்கள் ________ என்று அழைக்கப்படுகின்றனர். **விடை: ஹோமினின்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. பொருத்துக

| I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1 | டார்வினின் கொள்கை | அ | பெரிய கற்பாளத்திலிருந்து அல்லது கருங்கல்லில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட ஒரு சிறு கற்துண்டு | உ |
| 2 | ஆஷ்மோலின் | ஆ | கல்லிலும் எலும்பிலும் செதுக்கப்பட்ட சிற்பங்கள் | ஈ |
| 3 | செதில்கள் | இ | இடைக்கற்காலம் | அ |
| 4 | மீசோலிதிக் காலம் | ஈ | உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம் | இ |
| 5 | வீனஸ் | உ | உயிரியல் பரிணாமம் | ஆ |

## IV. சுருக்கமான விடை தருக

**1. புவி எப்பொழுது உருவானது? நிலவியல் ஆய்வாளர்கள் புவி வரலாற்றை எவ்வாறு பிரிக்கிறார்கள்?**

➢ புவி சுமார் 4.54 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது.

➢ புவியின் நீண்ட நெடிய வரலாற்றை நிலவியல் ஆய்வாளர்கள் நெடுங்காலம், காலம், ஊழி என்று பிரிக்கிறார்கள்.

---

**2. ஊகக்காலம் பற்றி சுருக்கமாக எழுதுக.**

**ஊகக் காலம்:**

➢ பரிணாம வளர்ச்சிப் போக்கில் உணர்தல் நிலை மற்றும் அறிவாற்றல் கொண்ட மனிதர்கள், இயற்கை, சுற்றியுள்ள உயிரினங்கள், உலகம் குறித்து சிந்திக்கவும் கேள்வி எழுப்பவும் தொடங்கினார்.

➢ சூரியன், சந்திரன் முதலான பல இயற்கை ஆற்றல்கள் குறித்து தமது சுய புரிதல்களை உருவாக்கினர். இப்புரிதல்களில் சில அறிவியல் பூர்வமானவை அல்ல.

➢ உலகின் தோற்றம் குறித்த அவர்களின் அறிவியலறிவின் போதாமை வெளிப்படும் இக்காலம் "ஊகக் காலம்" ஆகும்.

---

**3. கருக்கல் மற்றும் செதில் என்றால் என்ன ?**

➢ கருக்கல் (core) என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும். கற்சுத்தியலால் இதிலிருந்து செதில்கள் உடைத்து எடுக்கப்படுகின்றன.

➢ செதில் (flakes) – பெரிய கற்பாளத்திலிருந்து அல்லது கருங்கல்லில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட ஒரு சிறு கற்துண்டு.

---

**4. சர் இராபர்ட் புரூஸ் என்ன கண்டுபிடித்தார்?**

➢ பொ.ஆ.1863 இல் சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் பழங்கற்காலக் கருவிகளை முதன்முறையாகக் கண்டுபிடித்தார்.

➢ இங்கு கண்டெடுக்கப்பட்ட கைக்கோடரிகள் சென்னை கற்கருவித் தொழிலகம் என்று அழைக்கப்படுகின்றன. அவர் கண்டெடுத்த கருவிகள், சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன.

## V. தலைப்பு வினாக்கள்

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி .**

**1. மேல் பழங்கற்காலப் பண்பாடு**

**(i) பியூரின் என்பது என்ன?**

➢ பியூரின் என்பது கூரிய வெட்டுமுனை உள்ள கல்லாலான உளி.

**(ii) வீனஸ் என்று அழைக்கப்படுவது எது?**

➢ கல்லிலும், எலும்பிலும் செதுக்கப்பட்ட பெண் தெய்வச் சிற்பங்கள்.

**(iii) மேல் பழங்கற்காலப் பண்பாடு எப்போது தோன்றியது?**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



சுமார் 60000 ஆண்டுகளுக்கு முன்.

(iv) **பனிக்காலம் என்றால் என்ன?**
உலகின் பல பாகங்கள் பனியாலும் பனிப்பாளங்களாலும் மூடப்பட்டிருந்த காலம் (8000 ஆண்டுகளுக்கு முன்).

---

**2. ஹோமினிட் மற்றும் ஹோமின்ஸ்**

(i) **ஹோமினிட் என்போர் யார்?**
மனிதர்களை உள்ளடக்கிய நவீன மற்றும் அழிந்து போன அனைத்து பெருங்குரங்கு இனங்கள் ஹோமினிட் ஆகும்.

(ii) **ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?**
ஹோமோ ஹெபிலிஸ்

(iii) **நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?**
ஹோமோ சேப்பியன்

(iv) **இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.**
ஹோமோ ஹெபிலிஸ் / நியாண்டர்தாலென்சிஸ்

---

**3. மனித முன்னோர்களின் தொடக்க காலக் கற்கருவிகளின் தொகுப்பு**

(i) **அச்சூலியக் கருவிகள் கர்நாடகத்திலும் மத்திய பிரதேசத்திலும் எங்கு கண்டெக்கப்பட்டுள்ளன.**
அ) * கர்நாடகா - இசாம்பூர் , மத்திய பிரதேசம் - பிம்பெத்கா

(ii) **பியூரின் என்றால் என்ன?**
பியூரின் என்பது கூரிய வெட்டுமுனை உள்ள கல்லாலான உளி.

(iii) **இருமுகக் கருவிகள் என்றால் என்ன?**
இருபுறமும் செதுக்கப்பட்டதால் இக்கருவிகள் இருமுகக் கருவிகள் ஆகும்.

(iv) **மனித இன முன்னோடிகள் பயன்படுத்திய கல்லால் ஆன ஆயுதங்கள் சிலவற்றைக் கூறுக.**
கைக்கோடரி, வெட்டுக்கத்தி

## VI. விரிவான விடையளிக்கவும்

**1. மேல் பழங்கற்காலப் பண்பாடு குறித்து விவரிக்கவும்.**

**அறிமுகம்:**

(i) இடைப் பழங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து வந்த மேல் பழங்கற்காலப் பண்பாட்டில் ஏற்பட்ட கற்குருவி தொழிலில் புதிய நுட்பங்கள் சிறப்பான கூறாகும். இந்த மேல் பழங்கற்காலப் பண்பாடு சுமார் 60000 ஆண்டுகளுக்கு முன்தோன்றியது பனிக்காலம் முற்றுப் பெற்ற சுமார் 12000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஹோலோசின் காலம் வரை நீடித்தது. (பனிக்காலம் - தற்காலத்திற்கு 8000 ஆண்டுகளுக்கு முன்)

➢ இக்காலத்தில் கற்களாலான நீண்ட கத்திகளும், பியூரின் எனப்படும் உளிகளும் உருவாக்கப்பட்டன. சிலிகா அதிகமுள்ள பல்வேறு கல் வகைகள் கருவிகள் செய்யப் பயன்பட்டன.

**திறன்கள்:**

➢ பல்வேறு ஓவியங்களும், கலைப் பொருட்களும் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன. பல்வேறு செய்பொருட்கள் இவர்களது படைப்பாற்றல் திறனில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் தொழிகள் உருவானதைக் காட்டுகின்றன..

**மனித பரிணாம வளர்ச்சி:**

➢ முதல் நவீன மனிதர்கள் ஆப்பிரிக்காவின் சஹாராவிற்குத் தெற்குப் பகுதியில் (சப்-சஹாரா) தோன்றினர். இந்த இனம் மேல் பழங் கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவினார்கள். ஒருவேளை இவர்கள் அங்கிருந்தவர்களை விரட்டியிருக்கலாம். ஐரோப்பாவில் குரோமாக்னன் மனிதர்கள் வாழ்ந்தார்கள்.

**கருவிகள் மற்றும் கலைகள்:**

➢ கொம்புகளும், தந்தங்களும் கருவிகள் மற்றும் கலைப்பொருட்கள் செய்யப் பயன்பட்டன. எலும்பாலான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. பதக்கம் மற்றும் வேலைப்பாடு மிக்க கருவிகள் பயன்பாட்டில் இருந்தன.


➢ ஆடைகளை அணிந்தனர், சமைத்த உணவை உண்டனர், இறந்தவர்கள் மார்பில் கைவைத்த நிலையில் புதைக்கப்பட்டார்கள். கல்லிலும், எலும்பிலும் செதுக்கப்பட்ட வீனஸ் பெண் தெய்வச் சிற்பங்கள் ஐரோப்பாவிலும், ஆசியாவின் சில பகுதிகளிலும் உருவாக்கப்பட்டன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## மனவரைபடம்

### மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும் – வரலாற்றுக்கு முந்தைய காலம்






www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வரலாறு

அலகு 2

# பண்டைய நாகரிகங்கள்

## பகுதி – I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை__________ என்கிறோம்.
அ) அழகெழுத்து ஆ) சித்திர எழுத்து இ) கருத்து எழுத்து ஈ) மண்ணடுக்காய்வு
**விடை: ஆ) சித்திர எழுத்து**

2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை__________
அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ்
இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுள்களை வணங்குதல்
**விடை: இ) மம்மியாக்கம்**

3. சுமேரியரின் எழுத்துமுறை __________ ஆகும்
அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்
**விடை: ஈ) க்யூனிபார்ம்**

4. ஹரப்பா மக்கள் __________ பற்றி அறிந்திருக்கவில்லை
அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்
**விடை: ஆ) குதிரை மற்றும் இரும்பு**

5. சிந்துவெளி மக்கள் 'இழந்த மெழுகு செயல் முறை'யை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை __________ ஆகும்
அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன்
இ) பறவை ஈ) நடனமாடும் பெண்
**விடை: ஈ) நடனமாடும் பெண்**

6. i) மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.
ii) சீனர்கள் ஹைரோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்
iii) யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.
iv) பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுனர் ஆவார்
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (iv) சரி **விடை: ஈ) (iv) – சரி**

7. i) யாங்ட்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.
ii) வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்
iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்
iv) தாவோயிசத்தை நிறுவியவர் மென்சியஸ் என்று சீன மரபு கூறுகிறது.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி
**விடை: இ) (iii) சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான காலவரிசை எது?
அ) சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள்
ஆ) பாபிலோனியர்கள் – சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள்
இ) சுமேரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள் – அஸிரியர்கள்
ஈ) பாபிலோனியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள் – சுமேரியர்கள்

**விடை: இ) சுமேரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள் - அஸிரியர்கள்**

9. **கூற்று:**– மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.
**காரணம் :**– அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.
அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை: ஆ) கூற்றும் கரரணமும் சரி. ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ________ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப் பெரிய உருவம் ஆகும். **விடை: ஸ்பிங்க்ஸின்**

2. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை ________ஆகும். **விடை: ஹைரோகிளிபிக் (சித்திர எழுத்து முறை)**

3. ________ என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக்கூறும் பண்டைய பாபிலோனியாவின் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும். **விடை: ஹமுராபியின் சட்டத் தொகுப்பு**

4. சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் ________ ஆவார். **விடை: லாவோ ட் சு**

5. ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள ________ உருவங்களும் ஓவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன. **விடை: சுடுமண்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.
ஆ) க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.
இ) சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், செம்பில் செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் எகிப்தியர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.
ஈ) மெசபடோமியர்கள் சூரிய நாள்காட்டி முறையை வகுத்தார்கள்.

**விடை: அ) ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.**

2. அ) அமோன் ஓர் எகிப்திய கடவுள்
ஆ) அரண்களால் சூழ்ந்த ஹரப்பா நகரத்தில் கோயில்கள் இருந்தன.
இ) பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால மெசபடோமியாவில் உள்ள பிரமிடு வடிவ நினைவுச்சின்னமாகும்.
ஈ) பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை எகிப்தியர்களைச் சாரும் .

**விடை: அ) அமோன் ஓர் எகிப்திய கடவுள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. பொருத்துக.

| I | | II | | விடை |
|---|---|---|---|---|
| 1 | பாரோ | அ | ஒரு வகைப் புல் | உ |
| 2 | பாப்பிரஸ் | ஆ | பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம் | அ |
| 3 | பெரும் சட்ட வல்லுனர் | இ | மொகஞ்சதாரோ | ஈ |
| 4 | கில்காமெஷ் | ஈ | ஹமுராபி | ஆ |
| 5 | பெருங்குளம் | உ | எகிப்திய அரசர் | இ |

## V. சுருக்கமான விடை தருக.

**1. எகிப்தியர்கள் கலை கட்டடக்கலையில் திறன் பெற்றவர்கள் – விளக்குக**

➢ பாரோக்கிகளின் சாதிகளான பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. எ.கா: கெய்சோ அருகிலுள்ள கிஸா பிரமிடுகள்.

➢ பிரமிடுகள் எகிப்தியரின் பொறியியல், கட்டுமானம், மனித ஆற்றல் மேலாண்மை திறன்களை வெளிப்படுத்துகின்றன.

➢ 73 மீட்டர் நீள 20 மீட்டர் உயர சிங்க உடலும், மனித முகமும் கொண்ட சுண்ணாம்புக் படிமம் ஸ்பிங்க்ஸ், உலகின் உயரமான சிற்பங்களில் ஒன்று.

---

**2. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.**

➢ சுமேரிய நாகரிகத்தில் (மெஸபடோமியா) நகரின் மத்தியில் கட்டப்பட்ட செங்குத்தான பிரமிடுகள் வடிவ கோவில்கள் 'சிகுராட்' எனப்படும். உச்சிக்குச் செல்ல படிக்கட்டுகள் உண்டு.

➢ சிகுராட்டைச் சுற்றி சடங்குகளுக்கான தாழ்வாரங்கள், புனித இடங்கள், விருந்து அரங்குகள், தொழிற்கூடங்கள், களஞ்சியங்கள், கிடங்குகள், நிர்வாகக் கட்டிடங்கள், கல்லறைகள் அடங்கிய வளாகங்கள் இருந்தன. (புகழ்பெற்ற சிகுராட் இருக்குமிடம் உர்).

---

**3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி**

➢ சுமேரியர்களின் குடும்ப உரிமைகள், வணிகம், அடிமை முறை, வரிகள், கூலி குறித்த 282 குற்றப்பிரிவுகளுக்கான சட்டங்களைக் கூறும் முக்கியமான சட்ட ஆவணம்.

➢ "கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப்பல்" என்ற பழிக்குப்பழி வாங்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பழைய சட்டங்களின் தொகுப்பு

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. ஹரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் – இவற்றை அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்கு.**

**ஹைரோகிளிபிக்ஸ் – எகிப்திய எழுத்து முறை :**

➢ நினைவுச் சின்னங்களில் உள்ள முத்திரை மற்றும் இதர பொருட்களில் இந்த சித்திர எழுத்து முறை பயன்பட்டது.

➢ இந்த எழுத்துக்கள் எகிப்தியரின் குறியீகளைப் பயன்படுத்தும் திறனைக் காட்டுகின்றன.

**கியூனிபார்ம் – சுமேரிய எழுத்து முறை:**

➢ சுமேரியர்கள் கில்காமெஷ் என்ற காவியம் மற்றும் வணிகப் பரிமாற்றங்கள், கடிதங்கள், கதைகள் எழுதுவதற்கு இந்த ஆய்வு வடிவ எழுத்துக்களைப் பயன்படுத்தினார்கள்.

➢ இந்த எழுத்துக்கள் எழுதப்பட்ட சுட்ட களிமண் பலகைகள் சுமேரிய நாகரிகம் பற்றி ஏராளமான தகவல்களைத் தருகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு.**

**தத்துவம்:**

➢ லாவோட்சு – தாவோயிசத்தை தோற்றுவித்தவர். ஆசைதான் அத்தனை துன்பங்களுக்கும் மூலகாரணம் என்று வாதிட்டவர். சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர்.

**கன்பூசியஸ்:**

➢ ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கை சீர்திருத்தத்தை வலியுறுத்தியவர். புகழ்பெற்ற சீன தத்துவ ஞானி மற்றும் அரசியல் சீர்திருத்தவாதி. “ஒருவது தனிப்பட்ட வாழ்க்கை சீர்திருத்தப்பட்டால் அவரது குடும்ப வாழ்க்கை முறைப்படுத்தப்படும். குடும்பம் முறைப்படுத்தப்பட்டு விட்டால் தேச வாழ்வு முறைபடுத்தப்பட்டு விடும்” என்றார்.

**மென்சியஸ்:**

➢ சீனா முழுவதும் பயணம் செய்து ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறிய புகழ்பெற்ற சீன தத்துவ ஞானி.

**இலக்கியம்:**

➢ இராணுவ உற்பத்தியாளர் சன் ட் சூ – போர்க்கலை
அதிகாரப்பூர்வ சீன அரசு நூல் – திஸ்பிரிங் அண்ட் அடோம் அனல்ஸ் (வசந்தகால, இலையுதிர்கால ஆண்டு குறிப்புகள்)
ஹான் வம்ச காலத்தில் முறைப்படுத்தப்பட்ட சீனாவின் மிகப் பழமையான மருத்துவ நூல் – மஞ்சள் பேரரசரின் கேனன்ஸ் ஆஃப் மெடிசின் (மருத்துவக் குறிப்புத் தொகுப்புகள்)

---

**3. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.**

**சிந்துவெளி நாகரிகத்தின் புதையுண்ட பொக்கிஷங்கள்:**

➢ "சிந்துவெளி நாகரிகம்" பண்டைய நாகரிகங்களில் முக்கியமான ஒன்றாகும். இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. ஹரப்பாதான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

➢ ஹரப்பா நகரங்களில மதில் சுவர்கள், நன்கு திட்டமிட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன.

➢ அவர்கள் சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும் கற்களையும் கட்டமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள். உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களில் திட்டமிடலை கட்டுப்படுத்தியிருக்க கூடும்.

➢ மொஹஞ்சதாரோவில் உள்ள நன்கு தளமிடப்பட்ட பல அறைகள் கொண்ட மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும்.

➢ தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.

➢ அவர்கள் உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலங்களைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் மேலும் பருத்தி மற்றும் பட்டாடைகளைப் பயன்படுத்தினார்கள். செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.

➢ அவர்கள் பெண் தெய்வத்தை வழிபட்டார்கள். காலிபங்கனில் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இறந்தவர்களைப் புதைப்பது வழக்கத்திலிருந்தது.

➢ ஹரப்பர்களின் எழுத்துக்களுக்கான பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால் ஹரப்பா நாகரிகம் பற்றி முழுமையாக அறிய முடியாமல் உள்ளது.

## VII. மாணவர் செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. **வெண்கலக் கால நாகரிகம் நிலவிய இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்**
2. **பிரமிடுகள் மற்றும் எகிப்தியர்களின் எழுத்துமுறை குறித்து ஒரு விளக்கப்படம் தயாரிக்கவும்.**
3. **சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த முத்திரைகள், பானைகள் உள்ள படங்களைச் சேகரிக்கவும்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி – II கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. எகிப்தின் நைல் நதியின் நன்கொடை என்றவர் ____________
அ) கன்பூசியஸ் ஆ) ஹெறரோடெட்டஸ் இ) ஹோவாங்ஹோ ஈ) லாவோட்சே
**விடை: ஆ) ஹெறரோடெட்டஸ்**

2. கடல் வழியாக சங்க காலத்தில் தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்
அ) பாரசீகர்கள் ஆ) கிரேக்கர் இ) எகிப்தியர் ஈ) சீனர்கள்
**விடை: இ) எகிப்தியர்**

3. எகிப்தின் பாரோ என்பது ____________ ஆகும்
அ) மாய சக்தி ஆ) தெய்வீக சக்தி இ) கடவுள் நம்பிக்கை ஈ)மனித சக்தி
**விடை: ஆ) தெய்வீக சக்தி**

4. நீர் கடிகாரம் மற்றும் சந்திரனை அடிப்படையாகக் கொண்ட 12 மாத நாட்காட்டியை ____________ உருவாக்கினார்
அ) சுமேரியர் ஆ) எகிப்தியர் இ) சீனர் ஈ) இந்தியர் **விடை: அ) சுமேரியர்**

5. சீனாவின் துயரம் என அழைக்கப்படும் ஆறு ____________
அ) மஞ்சள் ஆறு ஆ) சிவப்பு ஆறு இ) வெள்ளை ஆறு ஈ) சிந்து ஆறு
**விடை: அ) மஞ்சள் ஆறு**

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. குவின் வம்சத்தை தோற்றுவித்தவர் __________ **விடை: ஷிஹிவாங்டி**
2. சீனப்பெருஞ்சுவரைக் கட்டியவர்__________ **விடை: ஷிஹிவாங்டி**
3. உலகின் முதல் இராணுவ அரசு ________ **விடை: அஸிரிய பேரரசு இரும்பு தொழில் நுட்பம்**
4. பல கடவுள் கோட்பாடு கொண்ட நாகரீகம் __________ **விடை: சுமேரிய நாகரீகம்**
5. காற்று , ஆகாயம் கடவுளாக வணங்கியவர் __________ **விடை: சுமேரியர்**

### III. பொருத்துக.

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | லோத்தல் | அ | பாகிஸ்தான் | உ | குஜராத் |
| 2 | மொகஞ்சதாரோ | ஆ | ஸ்பிங்க்ஸ் | அ | பாகிஸ்தான் |
| 3 | சிங்க உடல் மனித முகம் | இ | அனுபிஸ் | ஆ | ஸ்பிங்கஸ் |
| 4 | இறப்பின் கடவுள் | ஈ | தோத் (இபிஸ்பறவை) | இ | அனுபிஸ் |
| 5. | கற்றலின் கடவுள் | உ | குஜராத் | ஈ | தோத் (இபிஸ்பறவை) |

### IV. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. அ) எகிப்திய அரசர் பாரோ என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர்.
ஆ) எகிப்தியர் மரணத்திற்கு பிறகு வாழ்வு இல்லை என்றனர்.
இ) அடிமை முறை இல்லை, சிறை பிடிக்கப்பட்டோர் அடிமைகளாக
ஈ) பதப்படுத்தப்பட்ட இறந்த உடலை மம்மி என்று அழைத்தனர்.
1) அ, ஆ, இ (சரி) 2) ஆ (சரி) 3) இ, ஈ, (சரி) 4) அ, ஈ (சரி)
**விடை: 4) அ, ஈ (சரி)**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. அ) பாரோக்களின் சமாதிகளாக கட்டப்பட்ட பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள் பிரமிடுகள் ஆகும்.
ஆ) ஸ்பிங்ஸின் பிரம்மாண்டமான சிலை மனித உடலும் சிங்க முகமும் கொண்ட சுண்ணாம்பு கல் படிமம்
இ) அனுபிஸ் இறப்பின் கடவுள்
ஈ) மரணத்திலிருந்து காப்பாற்றும் கடவுள் அனுபிஸ்
1) அ, ஆ, இ (சரி) 2) ஈ (தவறு) 3) ஆ (தவறு) 4) அ, இ, ஈ (சரி)

**விடை: 4) அ, இ, ஈ (சரி)**

## V. சுருக்கமான விடை தருக.

**1. எகிப்திய மம்மிகள் பற்றி சிறுகுறிப்பு வரைக?**

இறந்த உடலை நாட்ரன் உப்பை கொண்டு 40 நாட்களுக்கு பாதுகாத்து உடலின் ஈரப்பதம் முழுவதும் உறிஞ்சிய பிறகு உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்துவிடுவார்கள். உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள். இவையே மம்மிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**2. சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?**

➢ பருவநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி, நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு, அந்நியர் படையெடுப்பு முதலியன சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சியுறக் காரணங்கள் ஆகும்.

➢ சிந்துவெளி நாகரிகம் முற்றிலுமாக அழிந்துவிடவில்லை. அது கிராமப் பண்பாடாக இந்தியாவில் தொடர்ந்தது.

**3. மெசபடோமியா நாகரிகம் உலகிற்கு அளித்த பங்களிப்பு பற்றி எழுதுக**

➢ சுமேரியர்கள், குயவர்கள் சக்கரத்தை முதலில் கண்டுபிடித்தனர். 360 நாட்கள் கொண்ட நாட்காட்டியை தயாரித்து 360 பாகைகளாக பிரித்தனர்.

➢ கியுனிபார்ம் எழுத்துமுறை அவர்கள் பங்களிப்பு. ஹமுராபியின் சட்டத் தொகுப்பு மெசபடோமியர்களின் மற்றொரு சாதனை ஆகும்.

## VI. தலைப்பு வினாக்கள்.

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**1. தொடக்க கால நாகரிகம்**

**அ) நாகரிகம் என்றால் என்ன?**

முன்னேறிய முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை .

**ஆ) தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக,**

எகிப்திய, மெசபடோமிய, சிந்துவெளி, சீன நாகரிகங்கள்.

**இ) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வதாரமாக இருந்தவை எவை?**

செழிப்பான பகுதிகளின் விவசாயிகள் உற்பத்தி செய்த உபரி உணவு, பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு உணவளிக்கப் போதுமானதாக இருந்தது.

**ஈ) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியபோது என்ன நடந்தது?**

பெரிய கட்டடங்கள், எழுத்துக்கலை உருவாக்கப்பட்டது. அறிவியல், தொழில்நுட்பம் சமூக மேம்பாட்டை உருவாக்கியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. எகிப்திய நாகரிகத்தின் பண்புகள்**

**அ) எகிப்து "நைல் நதியின் நன்கொடை" என்று அழைக்கப்படுவது ஏன்?**

எகிப்திய நாகரிகம் நைல் நதியின் செழிப்பை நம்பி இருந்தது. எனவே எகிப்து "நைல் நதியின் நன்கொடை" என அழைக்கப்பட்டது.

**ஆ) பாரோ மற்றும் விசியர்கள் என்போர் யார்?**

**பாரோக்கள்:** எகிப்திய அரசர்கள்

**விசியர்கள்:** பாரோக்களின் கீழ் மாகாணங்களை ஆளும் நிர்வாகிகள்.

**இ) பிரமிடுகள் என்றால் என்ன? அதனை ஏன் கட்டினார்கள்?**

பிரமிடு என்பது பிரம்மாண்டமான நினைவுச் சின்னம் ஆகும்.

அது இறந்துபோன பாரோவின் சமாதியாக கட்டப்பட்டது.

**ஈ) மம்மி உருவாக்க முறையைக் கூறு.**

எகிப்தியர்களின் மரணத்திற்குப் பிறகு வாழ்வு இருப்பதாக நம்பினார்கள். எனவே அவர்கள் இறந்தவர்களின் உடல்களைப் பதப்படுத்தி வைத்தார்கள். இவ்வாறு உடல்களை பதப்படுத்தி வைக்கும் முறைக்கு மம்மியாக்கம் என்று பெயர்.

## VII. விரிவான விடையளி.

**1. எகிப்தியர்களின் தத்துவம், அறிவியல், இலக்கியம் பற்றி விவரி?**

**தத்துவம்:**

- பண்டைய எகிப்திய தத்துவமாக கிட்டத்தட்ட எதுவும் அறியப்படவில்லை.
- பண்டைய கிரேக்க தத்துவம் எகிப்தில் ஊன்றியிருப்பதாக சிறிய எண்ணிக்கையிலான அறிஞர்கள் கருதுகின்றனர்.

**அறிவியல்:**

- சூரிய கடிகாரம், நீர் கடிகாரம், கண்ணாடி ஆகியவை எகிப்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை.
- அவர்கள் சூரியனை அடிப்படையாக வைத்து ஒரு நாட்காட்டியை உருவாக்கினார்கள். அதில் 30 நாட்கள் கொண்ட 12 மாதங்கள் இருந்தன. ஆண்டின் இறுதியில் ஐந்து நாட்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**இலக்கியம்:**

- இலக்கியப் படைப்புகளில் கணிதம், வானவியல், மருத்துவம், மாந்திரீகம், மதம் குறித்து எழுதப்பட்டவையும் உண்டு.

www.Padasalai.Net




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனவரைபடம்

### பண்டைய நாகரிகங்கள்




www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வரலாறு

அலகு 3

# தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

## பகுதி – I புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

1. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?
அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ்–பிராமி ஈ) கிரந்தம்
**விடை: இ) தமிழ் – பிராமி**

2. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற வியாபாரிகளையும், குதிரை வணிகர்களையும் பற்றிக் குறிப்பிடுகின்ற, இலங்கையின் பாலி மொழி வரலாற்று நூல் எது?
அ) தீபவம்சம் ஆ) அர்த்தசாஸ்திரம் இ) மகாவம்சம் ஈ) இண்டிகா
**விடை: இ) மகாவம்சம்**

3. காடாக இருந்த இடங்களை வேளாண் நிலங்களாக மாற்றுதல், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பெருமைகளுக்கு உரிய சோழ அரசன் யார்?
அ) கரிகாலன் ஆ) முதலாம் இராஜராஜன்
இ) குலோத்துங்கன் ஈ) முதலாம் இராஜேந்திரன் **விடை: அ) கரிகாலன்**

4. சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
அ) புகளூர் ஆ) கிர்நார் இ) புலிமான்கோம்பை ஈ) மதுரை **விடை: அ) புகளூர்**

5. (i) பொருள் பரிமாற்றத்துக்கான ஊடகமாக நாணயங்கள் இடைக்கற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.
(ii) மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.
(iii) ரோமானிய ஆவணமான வியன்னா பாப்பிரஸ் முசிறி உடனான வணிகத்தைக் குறிப்பிடுகிறது.
(iv) தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணைக்குறித்த கருத்து இடம்பெற்றுள்ளது.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி
**விடை: இ) (ii) மற்றும் (iii) சரி**

6. (i) பதிற்றுப்பத்து பாண்டிய அரசர்களையும் அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் குறித்துச் சொல்கிறது.
(ii) காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிக நடவடிக்கைகளை அகநானூறு விவரிக்கிறது.
(iii) சோழர்களின் சின்னம் புலி ஆகும்; அவர்கள் புலி உருவம் பொறித்த, சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்.
(iv) நெய்தல் என்பது மணற்பாங்கான பாலைவனப் பகுதி ஆகும்.
அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி இ) (iii) சரி ஈ) (iv) சரி **விடை: இ) (iii) சரி**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் __________ ஆகும்.
**விடை: கல்வெட்டியல்**

2. கடந்தகாலச் சமூகங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான சான்றுகளாக உள்ள சில பொருட்களை மீட்டெடுப்பதற்கு ஓரிடத்தை முறைப்படி தோண்டுதல் __________ ஆகும். **விடை: தொல்லியல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் __________ ஆகும். **விடை: அர்த்தசாஸ்த்ரா**

4. __________ என்பது பிரிவு அல்லது வகை என்ற பொருளில் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்ட கருப்பொருள்; மேலும், இது ஒரு வாழ்விடத்தை அதன் தனித்தன்மை வாய்ந்த இயற்கைக்கூறுகளுடன் குறிப்பதாகவும் உள்ளது. **விடை: திணை**

5. கிரேக்கர்கள், ரோமானியர்கள், மேற்கு ஆசியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மேற்கத்தியர்களை __________ என்னும் சொல் குறிக்கிறது. **விடை: யவனம்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
ஆ) எரித்ரியன் கடலின் பெரிப்ளுஸ் இந்தியா உடனான மிளகு வணிகம் குறித்துக் கூறுகிறது.
இ) இந்தியாவில்தொடக்ககாலத்தில்பயன்படுத்தப்பட்டநாணயங்களில்உருவங்கள்பொறிக்கப்பட்டிருந்தன; நாணயங்கள் பெரும்பாலும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன.
ஈ) சங்க காலம் வெண்கலக் காலத்தில் வேரூன்றத் தொடங்கியது.
**விடை: அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.**

2. அ) சேரர்கள் காவிரிப்பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும்.
ஆ) மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகள் அரசன் கரிகாலனைக் குறிப்பிடுகின்றன.
இ) தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.
ஈ) உப்பு விற்றவர்கள் வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் வணிகத்துக்காக மாட்டு வண்டியில் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்தார்கள்.
**விடை: இ) தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.**

## IV. பொருத்துக.

| | I | | II | விடைகள் |
|---|---|---|---|---|
| 1 | கல்வெட்டியல் | அ | முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு | ஈ |
| 2 | காலவரிசைக் குறிப்புகள் | ஆ | சங்க காலத் துறைமுகம் | அ |
| 3 | மேய்ச்சல் வாழ்க்கை | இ | விலையுயர்ந்த கல்லில் செய்யப்பட்ட ஆபரணம் | உ |
| 4 | புடைப்பு மணிகள் (cameo) | ஈ | கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது | இ |
| 5 | அரிக்கமேடு | உ | கால்நடைகளை வளர்த்துப் பிழைக்கும் நாடோடி மக்கள் | ஆ |

## V. சுருக்கமான விடை தருக.

1. **தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன – உன் கருத்துகளை முன்வைக்கவும்.**

➢ வரலாற்றின் தொடக்ககாலத்தைச் சேர்ந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வழியாக சங்ககால மக்களின் வாழ்க்கை முறை குறித்த சான்றுகள் கிடைத்துள்ளன.
**அகழாய்வு நிகழ்விடங்கள்:** அரிக்கமேடு, அழகன் குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம்,கொற்கை, வசவ சமுத்திரம் மற்றும் கேரளத்தின் பட்டணம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- சங்ககாலத் துறைமுகப்பட்டிணமான புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேட்டில் அகழ்வாய்வு நடந்தது. இவ்வாய்வில் சரக்குக் கிடங்கு, தொட்டிகள், உறை கிணறுகள், தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரம் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

**2. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?**

- சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்கள், முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள், ரோமானிய நாணயங்கள் ஆகியன சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள உதவும் சான்றாகும். சங்ககாலத்தின் முதன்முதலாக செலவாணிக்குரிய பொருளாக நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.
- முத்திரை பொறித்த நாணயங்கள் கொடுமணல், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களிலும், ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர் மண்டலத்திலும் கிடைத்துள்ளன.

**3. சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.**

- சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது. ஏனெனில், நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன. ஆற்று வடிநீர்ப் பகுதிகளிலும், குளம், ஏரி போன்ற நீர்ப்பாசன வசதி பெற்ற பகுதிகளிலும் நெல் பயிரிடப்பட்டது. புன்செய் நிலத்தில் தானியங்கள் பயிரிடப்பட்டன.
- செந்நெல், வெண்ணெல், ஐவனநெல் என நெல் வகைகள் குறித்து இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆதிச்சநல்லூர், பொருந்தல் ஆய்வுகளில் தாழிகளுடன் நெல்லும் கிடைத்துள்ளது. காடுகளில் இடம் விட்டு இடம் மாறி சாகுபடி செய்யும் முறை புனம் எனப்பட்டது.

**4. அயல் நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது – இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.**

**தமிழகமும் வெளிநாட்டுத் தொடர்புகளும்**

- **அயல் நாடுகளுடனான தமிழகத் தொடர்புக்கான சான்றுகள்:**
- ரோமானியக் கப்பல்கள் பருவக்காற்று காலத்தில் மேலைக்கடலான அரபிக்கடலைக் கடந்து தமிழகக் கடற்கரைகளுக்கு வந்தன.
- கிரேக்க ரோமானிய, மேற்கு ஆசிய மக்களான யவனர்களோடு வாணிபத் தொடர்பு இருந்தது. (யவனர் – கிரேக்க அயோனியா பகுதி சொல்)
  செங்கடல் பகுதியில் உள்ள பெர்னிகே, குசேர் அல் காதிம், தாய்லாந்து நாட்டில் உள்ள குவான் லுக் பாட் ஆகிய இடங்களில் கிடைத்த அகழாய்வுப் பொருட்கள்.
- தமிழ் இலக்கியங்கள் தென்கிழக்கு ஆசியாவை சுவர்ணபூமி என குறிப்பிடுகின்றன.
  (ஏற்றுமதி : மிளகு போன்ற நறுமணம் பொருட்கள், நவமணிகள், யானைத் தந்தம்.
  இறக்குமதி : தங்கம், வெள்ளி, செம்பு உள்ளிட்ட உலோகங்கள்)

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்க கால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின?**

- இரும்புக் காலத்தில் மக்கள் குழுக்களின் தலைவர்கள் தங்கள் நிலப்பகுதியை தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். இவர்களிடமிருந்தே வேந்தர்கள் தோன்றினார்கள். இவ்வாறு சங்காலத்திற்கான அடித்தளம் வேர்கொண்டது.

**சேரர்:**

- சேரர் ஆட்சிப்பகுதி தற்கால கேரளம் மற்றும் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி, தலைநகர் வஞ்சி, துறைமுகங்கள் முசிறி மற்றும் தொண்டி, பதிற்றுப்பத்து சேரர்கள் குறித்து குறிப்பிடுகிறது. மாலைபனம்பூ, இலச்சினை வில் அம்பு. (சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம்)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**சோழர்:**

- சோழரின் ஆட்சிப்பகுதி காவிரி வடிநிலம் மற்றும் தமிழ்நாட்டின் வடபகுதி. தலைநகர் உறையூர், துறைமுகம் பூம்புகார் (காவிரிப்பூம்பட்டிணம்) பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினம் குறித்து குறிப்பிடுகிறது. இலச்சிளை புலி. (கரிகால் சோழன் கல்லணை கட்டினார்).

**பாண்டியர்:**

- பாண்டியரின் ஆட்சிப்பகுதி தென் தமிழகம்.தலைநகர் மதுரை, துறைமுகம் கொற்கை, தமிழ் இலக்கியங்கள், தமிழ்ச்சங்கங்கள் குறித்து குறிப்பிடுகின்றன. மாலை வேப்பம்பூ, இலச்சிளை மீன். (பாண்டியன் நெடுஞ்செழியன் குறித்து மாங்குளம் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கூறுகின்றன.

**2. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?**

**சங்ககாலப் பொருளாதார மேம்பாட்டுக்கு தொழில்கள் மற்றும் கைவினைக் கலைகளின் பங்கு.**

- வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வணிகம், பணப்பரிமாற்றம், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் என மக்கள் வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்ப தொழில்களும் அவை சார்ந்த பொருளாதாரமும் இருந்தன. வணிகம் கடல் கடந்து பல நாடுகளுடன் நடைபெற்றது.
- உயிர் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதில் வேளாண்மை முதலிடத்தில் இருந்தது. நன்செய், புன்செய் நிலங்களில் நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன. மாடுகள், ஆடுகள் வளர்த்தல் மூலம் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கினர்.
- பல்வேறு பொருட்களைத் தயாரிக்கும் நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர்கள் இருந்தனர். பொருள் உற்பத்தி செய்யும் அமைப்புகளாக தொழிற்கூடங்கள் இருந்தன.
  - அன்றாட வாழ்வுக்குத் தேவையான பலவித மட்கலங்கள் தயாரிக்கப்பட்டன. (கரிய நிறம், செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள், கருப்பு-சிவப்பு நிறத்தவை)
  - இரும்பை உருக்கும் உலைகள் இருந்தன (உழக்கருவிகள், வாள், ஈட்டி, கத்தி தயாரிக்கப்பட்டன)
  - பலவித அணிகலன்கள், தங்க ஆபரணங்கள் செய்யப்பட்டன. (சுட்ட களிமண், செம்பு, தங்கம், வெள்ளி, நவமணிகள், செவ்வந்திக் கல், செம்மணிக்கல் ஆகியவற்றில் ஆபரணங்கள் செய்யப்பட்டன.
  - கண்ணாடி மணிகள் பல்வேறு வடிவங்களிலும், வண்ணங்களிலும் தயாரிக்கப்பட்டன.
  - சங்குகளை அரிந்து வளையல் செய்யும் தொழிலும், முத்துக் குளித்தலும் நடைபெற்றுள்ளது.

## VII. மாணவர் செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. **சங்க காலத் தமிழகம் மற்றும் அன்றைய தமிழ் அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளையும் தென்னிந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**
2. **அருங்காட்சியகத்துக்குச் சென்று, பழங்காலத் தமிழர்கள் குறித்த கல்வெட்டுச் செய்திகள், அவர்கள் பயன்படுத்திய நாணயங்கள், கருவிகளைப் பற்றிய செய்திகளை சேகரிக்க.**
3. **வரலாற்றின் தொடக்க காலத்தில் மக்கள் வாழ்ந்த அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கீழடி போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிடுக.**
4. **வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த ஆய்வுக்களங்களிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் பொருட்கள் மற்றும் தமிழ்-பிராமி எழுத்து முறை குறித்து ஓர் ஆய்வை மேற்கொள்க.**

## பகுதி – II கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. கல்வெட்டுகளைப் பற்றி படிப்பது

அ) கல்வெட்டு படிப்பு ஆ)கல்வெட்டு ஆய்வு இ) கல்வெட்டியல்

**விடை: இ) கல்வெட்டியல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. சுடுமண் களங்களில் காணப்படும் பெரும்பாலான பெயர்கள் எந்த மொழியில் உள்ளன
அ) பிராமி மற்றும் பிராகிருத மொழி ஆ) பிராகிருத மற்றும் தமிழ்
இ) தமிழ் மற்றும் வடமொழி ஈ) பிராமி மற்றும் தமிழ்
விடை: ஆ) பிராகிருத மற்றும் தமிழ்

3. இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் அகழாய்வு செய்த சங்ககால துறைமுகப்பட்டினம் எது?
அ) கீழடி ஆ) அரிக்கமேடு
இ) காவிரிப்பூம்பட்டினம் ஈ) கொடுமணல் விடை: ஆ) அரிக்கமேடு

4. இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகம் குறித்து குறிப்பிட்டவர் யார்?
அ) மூத்த பிளினி ஆ) கௌடில்யர் இ) தாலமி ஈ) தொல்காப்பியர்
விடை: அ) மூத்த பிளினி

5. பதிற்றுப்பத்து எந்த அரசர்களை குறித்தும், அந்த நாட்டின் எல்லைகள் குறித்தும் பேசுகின்றது
அ) சோழன் ஆ) பாண்டியன் இ) சேரன் ஈ) பல்லவன் விடை: இ) சேரன்

6. சதுர வடிவிலான செப்பு நாணயம் யாரால் வெளியிடப்பட்டது?
அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் விடை: ஆ) சோழர்

7. சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவராக கண்டெடுக்கப்பட்டவர்
அ) கண்ணகி ஆ) மாதவி
இ) மணிமேகலை ஈ) வெண்ணிக்குயத்தியார்
விடை: ஈ) வெண்ணிக்குயத்தியார்

8. எந்த குல மகளிர் உப்பு விற்றது குறித்து சங்க செய்யுள் குறிப்பிடுகிறது
அ) சமணர் ஆ) புத்த இ) சைவ ஈ) உமணர் விடை: ஈ) உமணர்

9. சங்க காலத்தில் தானியம் எந்த நிலத்தில் பயிரிடப்பட்டது?
அ) நன்செய் ஆ) புன்செய் இ) குறிஞ்சி நிலம் ஈ) முல்லை நிலம்
விடை: ஆ) புன்செய்

10. இரும்பு உருக்கு உலை அமைந்திருந்த இடம்
அ) கொடுமணல், கீழடி ஆ) கீழடி, குட்டூர்
இ) அரிக்கமேடு, கொடுமணல் ஈ) கொடுமணல், குட்டூர்
விடை: ஈ) கொடுமணல், குட்டூர்

11. 'காயல் சிறந்த நகரம்' என்று விவரித்த வெனீஸ் நகரப் பயணி யார்?
அ) வாஸ்கோடகாமா ஆ) அல்பெருனி இ) மார்கோபோலோ ஈ) மெகஸ்தனிஸ்
விடை: இ) மார்கோபோலோ

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழ் மொழி முதன்முதலில் எந்த வரி வடிவத்தில் எழுதப்பட்டது? விடை: தமிழ் பிராமி
2. காலத்தால் பிந்தைய நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
விடை: பதினெண்கீழ்க்கணக்கு நூல்
3. காப்பியம் என்பவை கவிதை நயமுடைய __________ வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகள்.
விடை: செய்யுள்
4. கப்பல் உருவம் கொண்ட சுடுமண் கலம் கண்டெடுக்கப்பட்ட இடம் __________ விடை: அழகன்குளம்
5. பிராகிருதம் வட இந்தியாவில் யார் காலத்தில் பேசப்பட்ட மொழி? விடை: மௌரியர்
6. பெரிப்ளஸ் என்பது __________ விடை: கடல் வழிகாட்டி
7. கண்ணாடி மணி செய்யும் தொழிலகங்கள் இருந்த இடம் __________ , __________
விடை: அரிக்கமேடு, குடிக்காடு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) அசோகரின் கல்வெட்டுகளில் பயன்படுத்திய வரிவடிவத்திற்கு அசோகன் கல்வெட்டு என்று பெயர்.
ஆ) பாப்பிரஸ் என்பது பண்டைய எகிப்தில் பாப்பிரஸ் என்ற நாணயத்திலிருந்து தயாரிக்கப்பட்ட தாள் ஆகும்.
இ) அசோகரின் கல்வெட்டுகளில் கேரளபுத்திரர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளவர்கள் சோழர்கள் ஆவர்.
ஈ) பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ரோமானியப் பேரரசின் சாலைகள் குறித்த விளக்கமான நிலப்படம் ஆகும்.

**விடை: (ஈ) பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ரோமானியப் பேரரசின் சாலைகள் குறித்த விளக்கமான நிலப்படம் ஆகும்.**

2. அ) திணை என்ற கருத்து விவரிக்கப்பட்டுள்ளது பதினெண்கீழ்கணக்கு நூல்
ஆ) சங்க காலத்திற்கான அடித்தளம் தாமிர காலத்தில் வேர் கொண்டது.
இ) கண்ணகிக்குக் கோயில் எழுப்பியவன் நெடுஞ்சேரலாதன்.
ஈ) காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**விடை: (ஈ) காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.**

3. அ) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் என்பது பண்டைய ரோமானிய நூலாகும்.
ஆ) இந்நூலின் ஆசிரியர் பெரிப்ளஸ்
இ) பெரிப்ளஸ் என்றால் திசை வழிகாட்டி என்று பொருள்.
ஈ) செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எரித்திரியன் கடல் ஆகும்.

**விடை: (ஈ) செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எரித்திரியன் கடல் ஆகும்.**

## IV. பொருத்துக

1. **விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அணிபுடைப்பு மணிகள் | அ | பொன் உருக்கும் உலை | உ |
| 2 | செதுக்கு வேலைப்பாடு | ஆ | கேரள புத்திரர்கள் | இ |
| 3 | புல்லியன் | இ | உருவம் உட்குழிவாகச் செதுக்கப்பட்டிருக்கும். | ஈ |
| 4 | அசோகர் கல்வெட்டு | ஈ | கட்டி தங்கம், வெள்ளி | ஆ |
| 5 | கேரள பட்டணம் | உ | நவமணி மேற்புறத்தில் வேலைப்பாடு மிக்க உருவம் | அ |

## V. சுருக்கமான விடை தருக.

1. **சங்ககால பெண்கள், படிப்பறிவு, முதல்நிலை உற்பத்தியில் ஈடுபட்டனர் – இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.**

➢ வெண்ணி என்ற ஊரைச் சார்ந்த வெண்ணிக்குயத்தியார் பெண்பாற் புலவராகக் கண்டறியப்படுகிறார். இதன் மூலம் சங்ககால பெண்கள் கல்வியில் மேம்பட்டு இருந்ததை அறியலாம்.

➢ மகளிர் திணைப்புனம் காத்தல் குறித்தும், உமணர் குல மகளிர் உப்பு விற்றது குறித்தும் சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. இதன் மூலம் பெண்கள் முதல்நிலை உற்பத்தியில் ஈடுபட்டதை அறியலாம்.

2. **நூல் நூற்கும் கதிர் என்றால் என்ன?**

➢ பருத்தியிலிருந்து நூலை எடுப்பதற்கு நூல் நூற்கும் கதிர் பயன்படுகிறது.

3. **தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகர்கள் பற்றிய குறிப்பு யாது?**

➢ தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் ஆளப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பொன் வணிகர்கள், துணி வணிகர்கள், உப்பு வணிகர்கள் என்று குறிப்பிட்ட பண்டத்தை மட்டும் வியாபாரம் செய்த வணிகர்களும் இருந்ததாக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**4. சுடுமண் களங்களில் மக்களின் பெயர்கள் தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன – இதற்கான காரணம் மற்றும் சான்றுகளுடன் விளக்குக.**

**காரணம்:**

- ஒரு பொருள் தமக்கு உரிமையானது என்பதைக் குறிப்பதற்காகவே அதன்மீது மக்கள் தம் பெயர்களைப் பொறித்து வைத்தனர்.
- கப்பல்களில் அல்லது வண்டிகளில் தம் பொருள்களை அடையாளம் காண்பதற்கும் தங்களது பெயர்களை எழுதினர்.

**சான்று:**

- தமிழ்நாட்டில் அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல், கீழடி, மேலும், எகிப்து நாட்டின் பெரேனிகே, குசேர் அல் காதிம் ஆகிய இடங்களிலும், ஓமன் நாட்டின் கோர் ரோரி என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## VI. தலைப்பு வினாக்கள்.

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**1. பியூட்டிங்கேரியன் அட்டவணை**

**(அ) பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது எதனை குறிக்கும்.**
நிலப்படம்

**(ஆ) இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் யாவை?**
பண்டைய தமிழகம் முசிறி துறைமுகம்

**(இ) இந்த அட்டவணையில் இலங்கை தீவு எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது?**
இலங்கைத் தீவு Taprobane என குறிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) இதில் முசிறி துறைமுகம் எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது?**
முசிறிஸ் என குறிக்கப்பட்டுள்ளது.

**2. நடுகற்கள்**

**(அ) மேய்ச்சல் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?**
கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்ள ஒரு குழுவினர் மற்ற குழுவினருடன் சண்டையிட்டனர்.

**(ஆ) பகைவர்களின் கால்நடைச் செல்வத்தைக் கவர்ந்தவர்கள் யாவர்?**
முல்லைநில மக்களின் தலைவர்கள்.

**(இ) இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர்?**
இறந்தவர் தியாகத்தை நினைவுகூர்ந்து நடுகற்களை நிறுவினர்.

**(ஈ) நடுகற்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விளக்கும் தமிழ் நூல் எது?**
தொல்காப்பியம்.

**3. தமிழ் அல்லாத சான்றுகள் (வெளிநாட்டவர் குறிப்புகள்)**

**(அ) தமிழ் அல்லாத சான்றுகள் மூலம் நாம் அறிந்து கொள்வது என்ன?**
பண்டைத் தமிழ்ச் சமூகம் உலகெங்கும் கொண்டிருந்த விரிந்த தொடர்புகள்.

**(ஆ) பாண்டிய நாட்டிலிருந்து முத்தும் சங்கும் வந்ததைக் கூறும் மௌரியர் காலச் செவ்வியல் நூல் யாது?**
சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தில் உள்ள "பாண்டிய காவாடகா என்ற குறிப்பு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**(இ) காலவரிசையான வரலாற்றுக் குறிப்பு என்றால் என்ன?**
முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைக் காலவரிசையில் விவரிக்கும் குறிப்பு.

**(ஈ) இந்தியாவுக்கும் ரோமானியப் பேரரசுக்கும் இடையே நடந்த மிளகு வணிகம் குறித்துக் கூறியவர் யார்?**
மூத்த பிளினி

**4. இந்தியத் தொழில்துறைகள் மற்றும் சங்க காலக் கைவினைகள்**

**(அ) நகர மயமாக்கத்தின் முக்கியமான கூறுகளைக் கூறுக.**
கைவினைத் தயாரிப்புகள், மிக நுண்ணிய வேலைப்பாடுடைய தொல்பொருள்கள்.

**(ஆ) மட்கலம் செய்பவருக்கான இன்னொரு தமிழ் பெயர் என்ன?**
பானை செய்வோர்.

**(இ) பானை செய்தலின் வெவ்வேறு வகைகள் யாவை?**
கரியநிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை, கருப்பு-சிவப்பு நிறத்தவை.

**(ஈ) விவசாயத்திலும் போரிலும் இரும்பின் பயன்பாடுகள் என்ன?**
உழுகருவிகளும், வாள், ஈட்டி, கத்தி போன்ற படைக்கருவிகளும் தயாரிக்கப்பட்டன.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. சங்க கால சமுதாயத்தைப் பற்றி ஆராய்க.**

**சமூகப் பிரிவுகள்:**

- சங்க காலத் தமிழ்ச் சமூகத்தில் பாணர், பரதவர், எயினர், உழவர், கானவர், வேட்டுவர், மறவர் போன்ற சமூக பிரிவுகள் இருந்தன.
- வட இந்தியாவில் காணப்பட்ட சாதி அமைப்பு தமிழகத்தில் வேரூன்றவில்லை. மாறாக செய்தொழில் அடிப்படையில் சமூகக் குழுக்களாகக் காணப்பட்டனர்.
- அரசர்களும், குலத்தலைவர்களும், வணிகர்களும் செழிப்பான வாழ்வில் திளைத்தனர். அந்தணர்கள் என்று அறிப்பட்ட பூசாரிகளும் இருந்தனர்.
- சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் மத்தியில் வறுமை நிலவியது. இசைவாணர்களாகிய பாணர்கள், செல்வம் படைத்தோரைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தினர்.

**பெண்கள்:**

- சங்க இலக்கியங்களில் தாய், தலைவி, செவிலித்தாய், தோழி என்று பற்பல இடங்களில் மகளிர் குறித்த செய்திகள் பலவாறு கூறப்படுகின்றன.
- பாணர் குலப்பெண்கள், நாட்டிய மகளிர், பெண்பாற் புலவர்கள், அரச மகளிர் ஆகியோர் குறித்தும் ஐவகை (நிலப்பகுதி சார்ந்த பெண்கள்) குறித்தும் குறிப்பிடுகின்றன.
- பெண்கள் தங்கள் கணவரோடு உயிர்துறக்க முன் வந்ததை அக்கால இலக்கியங்களில் சில இடங்களில் காணலாம்.

********




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனவரைபடம்

### தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com